In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 49/2021 | Prosecution witness P.W.4 |
| Name: Jeevitha | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 20-01-2025.

**(Accused present.)**

முதல் விசாரணை :-

நான் மாவூத்தன்பட்டியில் வசிக்கிறேன். சம்பவத்தில் இறந்துபோன செண்பகராஜன் எனது கணவர். அசா1, அசா3 என் கொழுந்தனார்கள். அசா2 என் மாமனார். ஆஜர் எதிரி ராம்குமாரை தெரியும். என் கணவர் எதிரி ராம்குமார் நடத்திவரும் கிளப்பில் வேலை பார்த்து வந்தார். 17.05.2020 ம் தேதி என் கணவர் சம்பள பாக்கியைக் கேட்டு போனார். காலையில் நான் வேலைக்கு போகும்போது என் கணவரை பார்த்தேன். என் கணவர் சம்பள பாக்கியை கேட்டபோது என் கணவருக்கும் எதிரி ராம்குமாருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. தவறான வார்த்தைகளை எதிரி ராம்குமார் சொல்லி என் கணவரைப் பார்த்து உன்னால்தான் கடையை மூடிவிட்டேன் எனச் சொல்லி, நீ இருந்தால்தானே சம்பளம் கேட்டுக்கொண்டிருப்ப எனச்சொல்லி கத்தியை எடுத்து என் கணவரின் இடதுபக்க மார்புக்கு கீழ் குத்திவிட்டார். அங்கிருந்த செந்தில்குமார் என்பவர் பாட்டிலை எடுத்து தலையில் அடித்தார். எனக்கு அசா1 கோபி தகவல் சொன்னார். உடனே நானும் என் மாமனாரும் மற்றொரு கொழுந்தனும் திண்டுக்கல் அரசு மருத்துவமனை சென்றோம். அப்போது என் கணவர் நன்றாக பேசினார். மருத்துவமனையில் இருக்கும்போது அங்கு வந்த போலீசாரிடம் என் கணவர் வாக்குமூலம் கொடுத்தார். மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு

மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு என் கணவர் ஐசியுவில் இருந்தார். பின்னர் 5.6.2020ம் தேதி என் கணவர் இறந்துவிட்டார். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை—இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.01.20 16:59:45 +0530

Principal District Judge,
Dindigul.